**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் :MCOP No: 149/2022 தேதி: 13.09.2024**

**ம.சா. 2 – சுப்பையா**

**குறுக்கு விசாரணை :** ( எதிர்மனுதாரர் தரப்பில்)

விபத்தில் இறந்த துரைபாண்டி என்பவர் எங்கள் ஊருக்கு பக்கத்துஊர்காரரர் ஆவார். விபத்து தேதியில் நான் வாழ்வாங்கியில் கோவிலுக்கு சாமி குடும்பிட வந்தேன். ஆதிசிவன் ஜீவ சமாதி என்ற கோவில் உள்ளது. நான் சொன்னமாதிரி கோவில் கிடையாது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் பேருந்து வாழ்வாங்கி பேருந்து நிலையத்திலிருந்து இருக்கன்குடி செல்வதற்காக கிழக்கு பக்கத்திலிருந்து மேற்கு திரும்பியது என்றால் சரிதான். திரும்பும்போது சிக்கனல் செய்து தான் பேருந்து திரும்பியது என்றால் சரியல்ல. சிக்கனல் போடவில்லை. இருச்சக்கர வாகனத்தில் சென்றவர் இடதுபக்கமாக தான் செல்லவேண்டும் என்றும் பேருந்திலிருந்து ஆட்களை இறக்கிவிட்டு திரும்பும்போது இருச்சக்கர வாகனத்தில் பேருந்து மோதிவிட்டது. தவறாக வலதுபக்கமாக சென்று பேருந்தில் விழுந்துவிட்டதால் தான் பேருந்தின் முன்பக்க வலதுபுற டயர் ஏறி விபத்து நடந்தது என்றால் சரியல்ல. இறந்தவரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.